REGD No M 4842

திராவிடநாடு

விலை அணா 2.
சிலோன் 15 சதம்

மலர் 10. | 28-10-51 | இதழ் 18.

★ ராமராஜ்யம் ★

அன்றும் இன்றும்

144—இல்லை.

எங்கும் கூடலாம்.

ஒலிபெருக்கி வைக்கலாம்.

எவரும் பேசலாம்.

கூட்டத்துக்காக போலீஸ் அனுமதி தேவையில்லை.

எப்போது வேண்டுமானாலும் கூட்டங்கள் நடத்தலாம்.

வெள்ளையன் வெளியேறுமுன் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது, இந்த உரிமைகள் இருந்தன, மங்காது. ஆனால், இன்றைய சுதந்திர ஆட்சியில்! பொதுக்கூட்டம் நடத்தவேண்டுமென்றால், சர்க்கார் அனுமதி வேண்டும். ஒலிபெருக்கி வைக்க விரும்பினால், சர்க்காரின் மேலதிகாரியிடம் ஓடவேண்டும். பேசப்போவது இன்னின்னார் என்ற பட்டியல் ஒப்புவிக்கப்படவேண்டும். கூட்டம் போடும் இடத்தையும், நேரத்தையும் சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டும்.

வெள்ளையன் வழங்கிய உரிமைகள் இந்த 'வீராதி வீரர்'கள் ஆட்சியில் இல்லை! பறிக்கப்பட்டுவிட்டன!!

"ஏய்! என்ன, இது?"

"ஒலிபெருக்கி..."

"அதிகப் பிரசங்கி. ஒலிபெருக்கி வைக்க அனுமதி வாங்கினாயா?"

"நீங்கள் தானே தந்தீர்கள்"

"தந்தேனா?...சரி ... இப்போது அதை ரத்து செய்கிறேன். எடு! எடு!!"

இதுபோல, சிலபல இடங்களில், பொதுக் கூட்டங்களிலே இடையூறுகள். ஒலிபெருக்கி வைக்காமலே கூட்டத்தை நடத்தும்படி தொல்லைகள்! ஒலிபெருக்கி முன் நின்று பேசிக்கொண்டிருக்கும்போதே, அனுமதி ரத்து செய்யப்படும் அவலநிலை.

இன்னும் பல இடங்களில், பேசிக்கொண்டிருக்கும்போதே, 'குரல்' நெரிக்கப்படுவதுபோல, சட்டம் பாய்கிறது.

"ஒன்பது மணி வரையில்தான் கூட்டம் நடத்த அனுமதி தந்தேன். மணி ஒன்பது அடித்து ஒரு நிமிடம் அதிகமாகிவிட்டது. ஆகவே, நிறுத்து!"

இவ்விதம் கெடுபிடி. பல பொதுக் கூட்டங்கள் பரபரப்போடு, முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

கூட்டம் நடத்த விரும்புவோர் சர்க்காரின் அனுமதியைப்பெற அலைவதையும் திரிவதையும் பார்த்தால், ஜனநாயகம் மருளும்; சுதந்திரம் வெட்கித் தலை குனியும்.

காங்கிரஸ் ஆளவந்தார்கள் பேச்சுரிமை சம்பந்தமாக விதித்திருக்கும் தடைகள் சிறிதும் தளரவில்லை—இப்போது, பொதுத் தேர்தல்!

பொதுத் தேர்தலின்போது தமது நோக்கங்களைத் தங்கு தடையின்றி எடுத்துச்சொல்லும் உரிமை எல்லோருக்கும், எக்கட்சியினருக்கும் இருக்கவேண்டும்.

அந்த உரிமையோடு நடைபெறும் பொதுத் தேர்தலையே ஜனநாயக முறைப்படி நடைபெற்றதாக நல்லோர் கூறுவர்.

ஆனால், இப்போது அந்த ஜனநாயக உரிமைகளை சர்க்காரின் 'அனுமதி' பெற்றே அனுபவித்துத் தீரவேண்டிய நிர்ப்பந்தம், நீடிக்கிறது.

'அனுமதி' பெற்றே, சுத்தமது எண்ணங்களை எடுத்துக்கூறும் நிலை, எதிர்க் கட்சிகளுக்கு இருந்து வருகிறது.

ஆட்சிபுரிவோர், காங்கிரசார் அவரது 'அனுமதி'யின்பேரில்தான் எதிர்க் கட்சிகள் தத்தமது எண்ணங்களை வெளியிடவேண்டும்.

இந்த நிலையில் பொதுத் தேர்தல் எத்தகைய இலட்சணம்!

அண்மையில், இந்திய குடியரசுத் தலைவர் ராசேந்திரபிரசாத் பேசுகையில், "பொதுத் தேர்தலின் போது எல்லா எதிர்க்கட்சிகளுக்கும் வேண்டிய நியாயமான வசதிகள் கிடைக்குமென நம்பலாம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால், அடிப்படை நியாயம் இன்னும் அலங்கோலத்தில்! அவலட்சணம் நிரம்பிய அடக்குமுறை நீடிக்கிறது—சிறிதும் தளரவில்லை.

வெள்ளையன், இந்திய விரோதி. அவனிருந்தபோது நடைபெற்ற தேர்தலின்போது கிடைத்த உரிமைகள் இன்றில்லை! இங்நிலையில் பொதுத் தேர்தலாம்—வாக்கெடுப்பாம்!!

இந்த நிலைபற்றி முதலில்எண்ண வேண்டும், தேர்தலில் ஈடுபடும் எதிர்க்கட்சிகள். குரலின் மேல் கொள்கையை உணர்த்தமுடியாது.

குரலெழுப்பவோ, தடைகளை நிரப்பியிருக்கிறது, காங்கிரஸ் அரசாங்கம்.

இந்தக் கொடுமை நீங்கவேண்டும்—கருத்துக்கள், மக்கள் மனதில் பரவ; எதிர்க் கட்சிகள், சங்கடமின்றி உலவ; ஜனநாயகம் கேலிக்குரியதாக ஆகாமலிருக்க!

அட்லி செய்யவில்லை!

சின்னஞ் சிறு கார்! அதனை ஓட்டிச் செல்வது, அவரது மனைவி! அவர் அமர்ந்து செல்கிறார்! ஊர் ஊராக, அதே காரில்தான் சென்று, பேசினார்! பிரச்சாரம் செய்தார்! திரும்பியதும், அந்தச் சிறிய காரில் தான்!

காரோ சிறியது! டிரைவரும் இல்லை! அதில் ஒரு நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணம்!

அவர் சாதாரண சுற்றுப் பிரயாணம் செய்யவில்லை! பிரச்சாரம் செய்திடவே சென்றார்! பிரச்சாரமென்றால், வெறும் பிரசங்கம் செய்ய அல்ல, பிரசங்க தூண்டியால், ஓட்டு மீன் பிடித்திட!

அதற்குத்தான் அந்தச் சிறிய காரில், மனைவியே ஓட்டிட, ஊர் ஊராகச் சென்றார்.

அவர், தேர்தல் பித்தம் மட்டும் பிடித்து, பண சத்தமே கேட்காத பேர்வழியோ என்று கருதவேண்டாம். அல்லது, இதற்குப் புதிய ஆசாமி யென்றும் எண்ணவேண்டாம்.

அவர்தான் இன்றைய ஆங்கில நாட்டுப் பிரதமர்-அட்லி. அண்மையில் நடைபெறும் தேர்தலுக்காக, தொழிற்கட்சி சார்பில் பிரச்சாரம் செய்யப்போன பொழுது, தன் சொந்த செலவில், சிறிய காரில், ஊர் சுற்றினார்!

அவர் நினைத்தால், சர்க்கார் செலவில், வெகு எளிதில், எங்கும் செல்லும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொண்டு, கட்சிப் பிரசாரம் செய்ய முடியும். ஆனால் செய்யவில்லை.

ஆனால் ராம ராஜ்யத்தில், சர்க்கார் செலவில், மந்திரிகள் காங்கிரஸ் பிரச்சாரம் செய்யத் தவறுவதில்லை. ஆட்சி சம்மந்தமான வேலையென்று பேசுவார்கள், ஆனால் தேர்தல் பிரச்சாரம் செய்வார்கள்.

ஆட்சியிலே இருப்பது தொழிற்கட்சிதான், இங்கிலாந்தில்! ஆனால், அட்லி, செய்யவில்லை, அங்கு!

ஆட்சியிலிருப்பது, காங்கிரஸ், இந்தியாவில்! சாதாரண முனிசிபல் தேர்தலிலிருந்து, காங்கிரஸ், தனக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தைக் கொண்டு, என்னென்ன செய்ய முடியுமோ, அவ்வளவும்செய்கிறது.

இதனை டெல்லியில் கூடிய பாரதீய ஜன சங்க முதல் மாநாட்டில், தீர்மானம் போட்டே, கண்டித்திருக்கிறார்கள்.

நாஞ்சில் மாவட்ட
மாநில மாநாட்டு
நன்கொடை
ரூ 2000
அளிக்கப் பட்டது

சர்க்கார் பணம், காங்கிரஸ் கட்சிப் பிரச்சாரத்திற்குப் பயன் படுத்தப் படுகிறது.

ரயில், விமானம் எல்லாம், அவர்கள் வசதிக்கே உபயோகப் படுத்தப் படுகிறது.

படக் காட்சியிலும், அவர்கள் பிரதாபம், வானொலியில் அவர்கள் பிரபல்யம் பேசப்படுகிறது! ஆளவந்தார், தமது உத்தியோகஸ்தர்கள் அனைவரையுமே கட்சிப் பிரச்சாரத்திற்குப் பயன் படுத்துகின்றனர்.

ஜனநாயக ஆட்சியிலே, நடைபெறக் கூடாத, முடியாத காரியத்தை, காங்கிரஸ் இயக்கம் கவலையின்றி செய்கிறது! கேட்பார் இல்லையென்ற தைரியத்தில்! ஆனால் கேட்பவர்கள் இருக்கிறார்கள் என்பதை இடித்துரைப்பதுதான், பொதுத் தேர்தல்! அவர்கள், ஓட் கேட்க வருகிற பொழுதாவது, அந்த உண்மை தெரியுமோ, தெரியாதோ!

எல்லாம், ராமராஜ்யம் என்று போதும், மக்கள் எல்லாம் அடங்கி விடுவார்கள் என்று நம்பினால் அவர்கள் ஏமாந்து போவார்கள்!

அட்லி, செய்யவில்லை! நேரு சர்க்காரில் அது நித்திய நிகழ்ச்சியாகி விட்டது! அதனால்தான் இது நீடிக்காது என்று மக்கள் கூறுகின்றனர்.

மாதவனார் புலம்பல்:

நீதி மன்றத்தை நிர்வாகம் புறக்கணிக்கும் மனப்பான்மை வளர்ந்து அதிகரித்து வருகிறது. பல விஷயங்கள் நீதி மன்றத்திற்குக் கொண்டு வரப்படாமலேயே முடிவு செய்யப்படும் முறையில் தற்கால சட்டங்கள் இயற்றப்படுகின்றன.

இவ்வாறு பேசியது, சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளில் ஒருவர். அரசியல் சட்டத்தின் அங்கங்கள் பழுதாகாமல் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுள்ள நீதிபதிகளில் ஒருவர்தான், இவ்வாறு பேசினார், சில மாதங்கட்கு முன் சென்னையில்.

இக் கருத்து, நமது சென்னை சட்ட மந்திரி மாதவ மேனனுக்குக் கசப்பாயிருக்கிறது. கசப்பில்லாத கருத்துக்கள் மாதவனாரிடமிருந்து கிளம்புவதும் மிகமிக அபூர்வந்தான்!

உத்தரப் பிரதேசத்தினருக்கு மாத்திரம் ஏன் அதிக உணவு ரேஷன் கொடுக்கவேண்டும், மதறாப் பகுதியினர் பட்டினியாய் மாள்கையில்? என்ற கேள்வி எழுந்தபொழுது, "அவர்கள் அதிக உணவு உற்பத்தி செய்கின்றனர். ஆகவே அவர்களுக்கு ஏன் அதிக ரேஷன் கொடுக்கக் கூடாது" என்று திருப்பிக் கேட்டவர்தான் நமது மாதவனார்!

இப்பொழுது, மாதவனாரின் கவனம், அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் மீதும், உயர்நீதி மன்ற அதிகாரத்தின் மீதும் பாய்ந்திருக்கிறது.

முக்கிய சட்டங்களின் பிரிவுகள் செல்லாதெனத் தீர்ப்பளிக்கும் அதிகாரம், நீதி மன்றங்களிடம் அளிக்கப்பட்டிருப்பது, மிக துர்ப்பாக்கியமான நிலைமை.

இந்த முறையில் வேலை செய்கிறது, மாதவனாரின் சிந்தனை சக்

ன் கருத்துக்குப் பலம் தேடும் றையில், பிரிட்டிஷ் பார்லிமெண் ன் அந்தஸ்தை எடுத்து அவர் ளக்குகிறார்.

உண்மைதான். ஆணைப் பெண் ணென்றும், பெண்ணை ஆணென் ம் கருதவேண்டும், என்று கூட பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சட்டம் செய்யலாம்! அதாவது, பார்லி மெண்டின் சட்டமியற்றும் அதிகாரத்திற்கு எல்லையே கிடையாது. மாதவனார் இதைச் சுட்டிக் காட்டி, நமது பார்லிமெண்டிற்கு இம் மாதிரி வரம்பற்ற அதிகாரம் இல்லையே, என்று அங்கலாய்க்கிறார். ஆனால் அவர் பிரிட்டிஷ் அரசியலமைப்பின் ஒரு முக்கிய அம்சத்தை ஏனோ எடுத்துக்காட்ட மறந்துவிட்டார்!

பிரிட்டிஷ் அரசியலமைப்பு சட்டத்தால் கட்டப்பட்டதல்ல; அது ஏட்டில் எழுதப்படாத சட்டம்.

அது, இன்று நேற்று முளைத்ததல்ல; அரசியலறிஞர்களின் மூளையிலிருந்து உதித்ததல்ல. பல நூற்றாண்டுகளுக்கு முன், அந்நாள் சூழ்நிலை காரணமாக உருவெடுத்து, அவ்வப்போது நிகழ்ந்த சந்தர்ப்பங்களின் சீதோஷ்ண நிலைகளுக்கேற்றவாறு வலுப்பெற்று, அரசியல் புலவர்களுக்கு வளைந்து கொடுத்து, இன்று மரமாக வளர்ந்து நிற்கிறது. அதன் ஆணிவேர் ஜனநாயகம்.

அது, சட்டப் புத்தகத்தில் எழுதப்படாமையாலும், சந்தர்ப்ப அவசியத்திற்கும், மக்கள் மனநிலைக்கும், தக்கவாறு வளர்ந்து வலுப் பெற்றதாலும், தனது எல்லையற்ற அதிகாரத்தைப் பகுத்தறிவுக்கு ஏற்ற முறையில், மக்கள் நன்மைக்குகந்த வழியில், தானே கட்டுப் படுத்திக்கொள்ளும் தன்மை பெற்றுள்ளது.

ஆனால், உலகின் மற்ற நாட்டு அரசியல் சட்டங்களெல்லாம் அவ்வாறு ஏற்பட்டவைபல்ல. அவை, சட்ட அறிஞர்களால் எழுதப்பட்டவை.

எழுத்தால் ஏற்பட்ட சட்டத்தில் எல்லாவற்றையும் எழுதியே தீரவேண்டும்.

மக்களின் அடிப்படை உரிமைகள் யாவை? சட்டசபையின் அதிகார எல்லை எது? நிர்வாகம் எந்த இடத்திற்கப்பால் போகக்கூடாது? நீதிமன்றம் எதைக்குறித்துத் தீர்ப்புச்செய்யலாம்? எழுத்து மூலம் தோன்றிய சட்டத்தில், இவ்வினாக்களுக்கு விடைகள் எழுதியே தீரவேண்டும். எழுதும்பொழுது, நிர்வாகம், சட்டசபை, நீதிமன்றம், இவற்றின் எல்லைக்கோட்டை வரையறுத்தே ஆகவேண்டும்.

இதை மாதவனார் உணர்ந்திருந்தும்,உணராததுபோல் பேசியதைத் தான் நாம் கவனித்தல் அவசியமாகிறது.

அர்த்தமற்ற, பொது மக்கள் வெறுக்கத்தக்க, சட்டங்களை இயற்றவும் பிரிட்டிஷ் பார்லிமெண்டிற்கு அதிகாரம் உண்டு. ஆனால், இந்த அதிகாரம் உபயோகப்படுத்தப்படுவதில்லை. அதே மாதிரி நமது இந்திய பார்லிமெண்டும் நடந்து கொள்ளுமென மாதவனார் உறுதி கூறமுடியுமா?

எழுத்தால் ஏற்பட்ட அரசியல் சட்டத்தில், மக்கள் உரிமைகளைப் பற்றிய பகுதிதான் அஸ்திவாரம் போன்றது; இந்த உரிமைகளை அரசாங்கம் (நிர்வாகம்) மீறினால், கண்டித்துத் திருத்தும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு இருக்கவேண்டும். எழுத்தால் எழுப்பப்பட்ட சட்டத்தில் இவற்றைச் சொல்லித்தானே ஆக வேண்டும்!

மாதவனார் கூறுகிறபடி, நீதி மன்றத்தின் பல்லைப் பிடுங்கிவிட்டால், மக்கள் உரிமைகளைக் காற்றுடியில்கட்டி விடவேண்டியது தான்!

ஒரு சூடு

பறந்து சென்றனர் மந்திரிகள், பதறித் திரும்பினர்!

பிரதமர் குமாரசாமி ராஜா, மாமத்து மந்திரி பக்தவத்சலம் இருவரும் டெல்லிக்குச் சென்றனர். திரும்பி வந்தனர்.

ஏன் சென்றனர்? எப்படித் திரும்பினர்?—கேட்க வேண்டிய கேள்விகள்!

அணைக்கட்டு திட்டங்கள், சில அரை குறையாகக் கிடக்கின்றன, அவைகளை தொடர்ந்து முடித்தாக வேண்டும்! ஆனால் பணமோ இல்லை! பணம் பெறும் வழியோ தெரியவில்லை!

பணம் இல்லை யென்றால், துங்கபத்ரா தூங்கிவிடும்! மற்றவைகளோ மங்கி விடும்! என் செய்வார் பக்தவத்சலனார்! பாஞ்சசைன்யம் எடுத்தா முழங்குவார்? முழங்கினால் மட்டும், என்ன நடந்துவிடும்!

பக்தவத்சலம், பிரதமர் ராஜாவிடம் கேட்டார். அவர் இவரைப் பார்த்தார்! இவர் அவரைப் பார்த்தார்! இருவரும் வடக்கு நோக்கி தெண்டனிட்டனர்!

பறந்தனர் டெல்லிக்கு! பதைபதைப்போடு கூறினர்! முடியுந்தறுவாயில் உள்ளன திட்டங்கள், இப்பொழுது நிறுத்துவதோ, தள்ளி வைப்பதோ முடியாது! ஆகவே, அபயம் அளியுங்கள் என்று அஞ்சலி செய்தனர்!

வரம் வேண்டிய பக்தர்களைப் பார்த்து, டெல்லி தேவதை, அதற்கு என்னவேண்டும் என்று கேட்க, பக்தர்கள், 19 கோடி செலவு செய்யவேண்டியிருக்கிறது என்று கூறினர்கள்.

19 கோடியா, என்று டெல்லி பயந்தது கண்டு, கனம் பக்தவத்சலனர் தேற்றினர். 3 கோடி, ஏற்கனவே கடன் வாங்கியிருக்கிறோம் என்று கூறினர்.

இன்னும் 15 கோடி தந்தால் போதும் என்றார் கனம் ராஜா.

ஆனால், கேட்ட வரம் கிடைக்கவில்லை—பாதிகூட அல்ல, அதிலேயும் குறைவு, 6 கோடி தருவதாக வாக்களித்தவுடன் திரும்பிவிட்டனர்.

சென்னை, இப்படி டெல்லியிடம் போய்ப் போய் ஏமாந்து திரும்பியும் ஏன் புரியவில்லை யென்று கேட்கத் தோன்றும். என்ன செய்வது? பல தடவைகளாகியுந்தான் பயனில்லை. ஒவ்வொரு தடவையும், ஒவ்வொரு மந்திரி போய், மூக்குடை பட்டுத்தான் திரும்புகிறார்கள்! அட்சயபாத்திரமேந்தி கனம் ரோச் விக்டோரியா சென்றாலும், காலி சட்டியுடன்தான் திரும்புகிறார்! நூல் கேட்டு கனம் பெருமாள்சாமி ரெட்டியார் சென்றாலும், நூலில்லையென்றே வருகிறார்! பக்தவத்சலம் சென்றும் பாதிவரம் கூடப் பெற முடியாமல் திரும்புகிறார்! இருந்தும் டெல்லியுடன் இருக்கிறார்கள். ஏன்? நல்ல மாட்டுக்குத்தானே ஒரு சூடு என்று சொல்லிவைத்தார்கள், நம் பெரியவர்கள்!

சால்வின் நதிதீரம்

கரன்கள் நாடாண்டவர்கள்! நாடோடிகளல்லர்! ஆளப்பிறந்தவர்கள்! அன்னக் காவடிகளல்லர்! அவர்கள் வாழ ஒரு நாடின்றி ஏங்குவதா? இருக்க இடமின்றி தவிப்பதா? கூடாது, கூடாது! ஆண்ட மரபிலே வந்தவர்களுக்கு, நாடில்லையா? ஆளும் உரிமையில்லையா? இது அநீதி, உலகம் ஒப்பாத அநீதி! கரன்களுக்கோரு நாடு வேண்டும்! கரன் நாடு நிறுவியாக வேண்டும்! நாட்டை உண்டாக்க முடியும், அவர்களால்! உருவாக்க முடியும், அவர்களால்! கோழைகளல்லர், கரன்கள்! குகைவாழ் புலிநிகர் மாந்தர்களாய் அவர்கள் வாழ்ந்ததை வரலாறு சொல்லும்! அவர்கள் தொழில் அறிவு எவரையும் வெல்லும்! வீரம், அவர்களுக்குத் தாய்! விவேகம், அவர்களின் தந்தை! அத்தகைய மாபெரும் சமுதாயத்தை நாடில்லா நாடோடிகளாக்கிடுவதா?

அவர்கள் எண்ணினர்! பிறகு எடுத்துரைத்தனர்! இறுதியில் எழுச்சிக் குரலாக்கினர், தங்கள் கோரிக்கையை! கரன்கள், தனிநாடு ஏற்படுத்தும் எண்ணத்தை, தங்களின் எழுச்சியெனும் விதையிட்டு, உழைப்பு நீர் பாய்ச்சி, வளர்த்து, கரன் நாடு வேண்டும் என்றதொரு உரிமைச் செடியாக வளர்த்து விட்டனர்!

கரன் நாடு வேண்டும் என்று அவர்கள் கேட்கத் தொடங்கிய நேரத்தில், செவி சாய்த்தவர் கிடையாது! கேலி செய்தோர் ஏராளம்!

கரன்களுக்கொரு நாடாம்! ஆட்சியாம்! இது என்ன கேலிக்கூத்து என்று பேசினர்.

அவர்களின் கோரிக்கையை புரியவில்லை யென்றனர் சிலர்.

புரிந்தும் புரியாததுபோல் நடித்தனர் பலர்.

சிலர், முடியாதது இது, வீண் பிரயத்தனம் என்று தீர்ப்பளித்தே விட்டனர்.

தனி நாடாம்! எப்படி முடியும்? சின்னஞ்சிறு இடங்களெல்லாம் தனித்தனி நாடுகள் என்று பெயர் வைத்துக்கொண்டு தறுதலையாட்டம் காரணங்காட்டி, கண்டனம் தெரிவித்தனர் சிலர்.

பர்மா பாழ்பட்டுத்தான் போகும் இத்தகைய பிரிவினைகளை அனுமதித்தால் என்று உபதேசம் புரிந்தனர்.

பர்மாவில் வாழ்பவர்கள்தானே, அதிலே என்ன தனிநாடென்ற பெயர் எனப் பேசினர், சிலர்.

கரன்கள் கலங்கிவிடவில்லை, தங்கள் கோரிக்கையை நிறைவேற்றியே தீருவோம், என்றே முழங்கினர்.

கரன் நாடு வேண்டும் என்ற விடுதலை கீதம், பர்மா முழுவதும் கேட்கத் தொடங்கிற்று! எங்கும் கரன்கள் நாடு அமைத்திடுவது பற்றிய பேச்சே நிறைந்திடலாயிற்று!

எதிர்த்தனர் பலர்! இருந்தும், அந்த முழக்கம் நின்றுவிடவில்லை! தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது!

* * *

கரன்கள், பர்மாவில் வாழும் பழங்குடிகள்! பூர்வீக இனத்தவர்கள்!

சால்வின் நதிதீரத்திலே, அன்றோர் நாள் கரன்னி என்ற பெயரில் எழில் மிகுந்த நாடமைத்து வாழ்ந்து வந்த வீர இனத்தவர்கள் அவர்கள்.

காலவேகத்தில், நாடிழந்து, நாடோடிகள் போல பர்மா முழுவதும் பரவி, அங்கங்கே தங்கி விட்டனர்!

சால்வின் நதிதீரத்திலே, வழிந்து படிந்த பழம் பெரும் நாகரீகம், கரன்களுடையது! அந்த நாகரீக சரித்திரம், நமக்குக் காட்டுகிறது, அவர்கள் அறிவின் செல்வர்கள் என்பதை! சொல் நுட்பமறிந்த விற்பன்னர்கள் என்பதை! அவர்கள்தான் பிறகு, சால்வின் தீரத்திலிருந்து, சிதறியோடிவிட்டார்கள்.

இந்தப் பழைய வரலாறு, இன்று கரன்களின் கண்களிலே புதிய ஒளியையும், கருத்திலே பலமான நம்பிக்கையையும் ஊட்டி விட்டது.

ஆகவேதான், இழந்த 'கர[...]னி'யை அடைய அவர்கள் எண்[...]னர்.

அவர்கள் எண்ணத்தை தவ[...]னது என்று தடுத்துரைத்தனர்.

பிறகோ, அவர்களின் முயற்சி[...] முறியடிக்கும் நிகழ்ச்சிகள் பல[...] நிகழ்ந்தும், அவர்கள் மனந்தளர்[...] விடவில்லை.

'கரன்கள் நாடு வேண்டும்' என[...] இலட்சிய ஒலியை, பல இடையூ[...]களுக்கிடையே, விடாது தொடர்ந்து எழுப்பியபடியே இரு[...]தனர்.

அந்தக் குரல் முதலில், தொ[...] குறைந்திருந்தது. ஆகவே, பலரின் செவி சென்றடையவில்லை. குரலின் தொனி பெருத்தும், சிலர் காது[...]களைப் பொத்திக்கொண்டிருந்தனர். அவர்கள், செவிகளில் விழவில்லை விழவில்லையென்றே பேசினர்.

கரன்களின் விடாமுயற்சி செவி[...]டர்களையும், செவிசாய்க்க வைத்து விட்டது!

நாட்டோரிடம் கூறியதுமட்டு[...]மல்ல, நாட்டையாளும் அவை[...]யிலும், இந்தப் பிரச்சினை பேசப்பட்[...]டது. பேசும் நிலையை உண்டாக்கினார்கள், கரன்கள்.

பர்மா யூனியனிலுள்ள நாடுகளைப் பார்க்கிறபொழுது, அவர்கள் இத[...]யத்திலே ஏற்றிவைக்கப்பட்ட விடு[...]தலைத் தீபம், மிகப் பிரகாசமாக எரி[...]யத் தொடங்கிவிட்டது.

ஷான் ஒரு தனிநாடாக இரு[...]க்கும்பொழுது, கரன் நாடு இருப்ப[...]தில் என்ன தவறு? கச்சின் தனி நாடாக அமைகிறபொழுது, கரன் நாடு மட்டும் கூடாதா? — என்று கேட்டனர்.

இந்தக் குரல், மக்கள் இதயங்களில் எதிரொலித்தது மட்டுமல்ல, சட்டசபையிலும் ரீங்காரமிட்டது.

11-ம் பக்கம் பார்க்க

திருப்பரத்தில்
மாநில மாநாட்டுக்காக
ரூ. 300
அளிக்கப்பட்டது.

11-ம் பக்கத் தொடர்ச்சி

வகுப்புகள் இருப்பதால்தானே, வகுப்புவாதம் இருக்க முடிகிறது! வகுப்புகளையே ஒழித்துவிட்டால், அந்த வாதம் எப்படி வரமுடியும்?

இதனை அவர்கள் புரிந்துகொண்டால், நம்மீது, அந்த சொல்லை வீசிடமாட்டார்கள்!

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்றே முழங்கும் நம்மைப் பார்த்து, வகுப்வாதிகள் என்றால், ஒப்புக்கொள்வர்.

சாதியிரண்டொழிய வேறில்லையென்று சாற்றிடும் நம்மை, வகுப்புவாதம் புரிந்திடும் அரக்கர்கள் என்றால் மக்கள் சிரிப்பர்.

பேதமற்ற சமுதாயத்தை அமைப்பதையே குறிக்கோளாகக்கொண்டு பணியாற்றும், ஒரு இயக்கத்தை ஒழிக்க, இந்த வகுப்புவாதம் என்ற ஆயுதத்தை நம்பினால் தோற்றுப் போவர்.

ஆகவேதான், வகுப்புவாதத்தை ஒழிப்போம் என்று நேரு பேசுவதால் மட்டும், அல்லது, அதனை தேர்தல் தீரர்கள் எதிரொலிப்பதால் மட்டும் தீர்ந்துவிடாது!

அதுவும், வடநாட்டில், அதற்குதரும் அர்த்தம் வேறு! இங்கு அது தாங்கிடும் பொருள் வேறு!

இங்கு, வகுப்புவாதத்தையே வேரோடு களைந்தெறிய வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டுள்ள நம்மீது அந்த வார்த்தையை வீசிச் சாய்த்திடத் துணிகின்றனர்.

தேர்தல் நேரத்தில், இந்த ஆயுதத்தை, அவர்கள் கையில் புதிதாகத் தந்துள்ளார்.

பழைய ஆயுதம், புதிய கூருடன்! இருந்தும், பயன் என்ன?

வகுப்புகளை ஒழிக்காமல் வகுப்புவாதத்தை எப்படி நீக்குவது? வகுப்புகளை நீக்க முடியும், அவர்களால்! காரணம், அவர்கள் ஆட்சியிலே இருக்கிறார்கள். அதிகாரம் இருக்கும் நேரத்தில் அவர்கள் செய்யவில்லை. செய்யாத குற்றம் ஒருபுறத்திலிருக்க, வேறு யாரோ செய்யத் தவறியது போல, அவர்கள் பேசுவதுதான் வேடிக்கை.

சாதிகளை ஒழிக்க முடியவில்லை, சமூகத்தில்! ஆனாலும் வகுப்புவாதத்தை ஒழிக்கப் போகிறார்கள்!

சமதர்மத்தை நிலைநிறுத்த முடியவில்லை, சமூகத்தில்! ஆனாலும் ஜாகீர்தார்கள், நிலப் பிரபுத்துத்தால் பணம் பெருத்தவர்களை அடக்கப் போகிறார்கள்! இவர்கள் பேசுவது விந்தையிலும் விந்தை!

ஆட்சியாளர்கள் வகுப்புவாதம் வளரும் முறையில் நடந்துகொண்டுள்ளார்கள்! வகுப்புவாத திரைக்குள்ளே, பிற்போக்கு வாதிகள் புகுந்துகொண்டு, முன்னேற்றத்தை தடுப்பார்கள் என்று அவர்களே பேசுகிறார்கள்!

ஆகவேதான் நேருவின் இன்றைய பேச்சு, நம் திராவிடத்தில், அர்த்தமற்றது மட்டுமல்ல, அவசியமற்றது.

வகுப்புவாதம் என்பது தேர்தல் வாதமாக வேண்டுமானால் பயன்படுமே தவிர, நாட்டு மக்களுக்கு வாழ்வளிப்பதாகாது!

8-ம் பக்கத் தொடர்ச்சி

துக்காட்டும் போது சீறிக் கிளம்பும் இந்த சிங்கங்களை, எண்ணும் போது 'ஒய்யாரக் கொண்டையாம், தாழம்பூவாம்! உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்!'' என்பதே நினைவுக்கு வருகிறது.

உள் புண்ணைப் புனுகு பூச்சால் மறைக்கப் பார்க்கிறார்கள். பிறர் எடுத்துக் கூறும்போது, 'பித்தா பிறை சூடி' என்று பேதலித்து அழுகிறார்கள், அலறுகிறார்கள், ஆர்ப்பரிக்கிறார்கள்.

ஆனால், அந்நியர் வெளியிடும் வார்த்தைகளிலுள்ள உண்மையை உணர்வதில்லை. உணர்ந்தினாலும், ஆத்திர வசமாகின்றனரே யன்றி, அந்தக் குறைகளைக் கண்டறியும் கருத்து எழுவதில்லை, அவர்களுக்கு.

இந்துமதம், புராண மேடுகளில் புரள்கிறது.

புராண ஏடுகள், ஆபாசக் கற்பனைகளால் நிரம்பிக் கிடக்கிறது.

ஆபாசக் கற்பனைகள், ஆரிய தர்மம் காப்பாற்றப்பட உபயோகமாகின்றன.

ஆரியதர்மத்தை இழக்க, முன்ஷி பரம்பரை முன் வருவதில்லை.

ஏனெனில், அதுவே அவர்களது சொர்க்கவாசல், சுந்தரச்சோலை.

இந்த சுயநல லாபத்தை எண்ணியே, படித்துப் பட்டம் பெற்றோரும், பரங்கியரை விரட்டினோமென்று பண் பாடுவோரும், பழமைப் புராணங்களைப் போற்றுகின்றனர், அவை தரும் கதைகளுக்கு விழா நடத்திக் குதூகலிக்கின்றனர்.

நேரு, அறிவார். ராமன் அவதார புருஷனல்லவென்பதையும், இலங்கேஸ்வரனை வதைத்த நாளை இன்றும் கொண்டாடுவதால், பயனேதும் இல்லையென்பதையும்.

நேரு, படித்தவர் — இராவணன் திராவிட வேந்தன் என்ற உண்மையைச் சொன்னவர். அகில உலகும் போற்றும், நிலையிலிருப்பவர். திராவிட மன்னனை ஒழித்த திருநாளைக் கொண்டாடுவதால் எத்தகைய மன அதிர்ச்சி, சரிதம் படித்த தென்னாட்டாருக்கு ஏற்படும் என்பதை அறியாதவருமல்ல.

ஆனாலும், விழாவை அனுமதிக்கிறார்! கலந்துகொள்கிறார்! சின்னஞ்சிறு பேரப் பிள்ளைக்கும் அக்கதையைக் காட்டுகிறார்!!!

இந்த மனோபாவம் வளர்வது, இந்துமதம் பிணக்குழியில் விழவே உதவும்.

முன்ஷி பரம்பரையின் அலறலும் ஆவேசமும், ஆபாசம் மலிந்த இந்த கேடுகெட்ட மதத்தைக் காப்பாற்றிவிடாது.

இந்துமதமும், அதன் ஏகாதிபத்திய வாரிசுகளாயிருக்கும் முன்ஷி பரம்பரையும் இருக்கும்வரை, அந்நியரின் ஏளனமும் பரிகாசமும் ஏற்படத்தான் செய்யும்.

அதை, முன்ஷி போன்றோரின் ஆவேசம் நிறுத்திவிட முடியாது— உள் புண் ஒழியவேண்டும்; மருந்து புனுகு அல்ல, அதற்கு!

புது விருந்து

சி. என். ஏ,

தீட்டிய புது காதலோவியம்

கபோதிபுரக் காதல்

கே. ஏ. மதியழகன்

தீட்டிய சிந்தனைச் செல்வம்

அறிவின் தூதர்கள்

திராவிடப் பண்ணை

(A.) தெப்பக்குளம், திருச்சி.

திராவிடநாடு

காஞ்சி] 28—10—51 [ஞாயிறு

அனுமான் கதை

★

வாங்கிய விலை ரூ	2,57,680-0-0
ஏற்பட்ட செலவு ரூ	1,96,580-8-0
மொத்தச் செலவு ரூ	4,54,260-8-0

* * *

"அனுமானை வாங்கிக் கொண்டு வந்து, பராமரிக்கும் வகையில் இந்தச் செலவு ஆகியிருக்கிறது இன்னும், அனுமான், நம்மிடமே இருக்கிறது."

* * *

"பக்தவத்சலா! பரமதயாளா!!" என்று பதறியதைக் கேட்டு, பாபம் பக்தன் கதறுகிறானே, ரட்சிப்போம் என்று கருடவாகன ரூபராய் வந்த பக்தவத்சலர் அல்ல; நமது மாநிலமதிமுகமராமத்து அமைச்சர் பக்தவத்சலம் மேற்படி தகவல்களை அறிவித்திருக்கிறார்.

"இப்போது, அனுமான் எங்கே?"

"மீனம்பாக்கத்தில் கிடக்கிறது!"

இதுபோல, ரசமான கேள்வியும் பதிலும் கடந்த 23-ந்தேதி சென்னை மேல சபையில் பரிமாறிக்கொள்ளப் பட்டனவாம். அப்போது, மேற்கண்ட கணக்கு விவரம், மராமத்து அமைச்சரால், தரப்பட்டிருக்கிறது.

'அனுமான்' என்ற பெயரில், சென்னை சர்க்கார் ஆகாய விமானம் ஒன்று வாங்கியதும், அது உபயோகமற்று மீனம்பாக்கத்தில் கிடப்பதும், எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதற்கென, சர்க்காரின் கஜானாவிலிருந்து காலியாகியிருக்கும் தொகை இப்போது தெரிந்திருக்கிறது!

இத் தகவலை தயக்கத்தோடு தந்திருக்கும் பக்தவத்சலம், அனுமான் மூலம் வந்த வருமானத்தையும் குறிப்பிட்டுள்ளார். அது, ரூ. 11,325—7—0 !!

இந்த விபரத்தைக் காண்போரின் இதயம் குமுறும். ஒரு விமானத்துக்காக சுமார் ஐந்து லட்சமா! என்று ஆவேசத்தோடு கேட்கத் தோன்றும்.

அவர்களுக்கு மேலும், ஒரு தகவல் தந்துள்ளார், அமைச்சராக, இன்னும் சிலகாலம் இருக்கப் போபவர்.

"அனுமான், இப்போது உபயோகத்திலில்லை. அதை விற்றுவிடலாமென விரும்பி, வெளியிட்டோம். யாரும் வாங்கவில்லை!"

அனுமான், பேசாமல் கிடக்கிறது; அசையவில்லை. யார் தலையிலாவது கட்டலாமெனப் பார்த்தாலும் வாங்குவாரில்லை! யாராவது, எடுத்து உபயோகப்படுத்த முன் வருவார்களா என்றால் அதுவும் இல்லை!!

* * *

"நாட்டுக்குத் தேவையான நன்மைகளை நீங்கள் ஏன் செய்யவில்லை"—இதுபோல, தேர்தல் கூட்டங்களில் கர்ஜனை எழுப்பச் செல்லும் காங்கிரஸ் 'கனம்'களைக் கேட்டால், "நாங்கள் என்ன செய்வோம்? செய்யவேண்டுமென்று ஆசைதான். ஆனால், பணம் இல்லையே!" என்று பதில் தருகின்றனராம். பணம் இல்லாதது பற்றி விளக்க ஆரம்பித்து, பாகிஸ்தான் பிரிவினை, புதுச் சுதந்திரம், அணைக் கட்டு வேலை, இதுபோலப் பலப் பல பேசுகின்றனராம்!

ஐந்து லட்சம்!—தங்களது ஆடம்பரத்துக்காக, ஆனால், அப்படி வாங்கிய விமானமும் ஓடவில்லை; பயனும் பலனும் தரவில்லை. அதை விற்கலாமென்றாலும், வாங்குவாரில்லை.

எவ்வளவு அவலட்சணம் இது! இதை வெளியில் சொன்னால் என்ன நினைப்பர்!!

சர்க்காரின் கஜானாவை நிரப்பும் விவசாயியின் காதில் இந்தக் கேவலம் விழுந்தால், என்ன நினைப்பார். ஏழைத் தொழிலாளியின் இதயம் எத்தகைய எரிமலையாகும்!

காங்கிரஸ் ஆட்சியின் அலங்கோலம் பற்றி கேள்வியுறுவோர் 'அக்கிரமம்! அநீதி!!' என்றே குமுறுவர்.

அந்தக் குமுறல், இன்று கோலோச்சியானோரை, கொண்டு டப் பரியிலிருந்து வீழ்த்தவேண்டும்.

அப்போதுதான், எதிர்காலத்தின் சாபத்திலிருந்து, நமது நாடு தப்பிப் பிழைக்கும்.

—✲—

மாநில மாநாடு

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ, மைதானத்தில் மாநில மாநாடு நடத்துவதற்கு சென்றதிங்களில் அனுமதியளித்தார்கள். நாம் தேதி மாற்றி, நவம்பர் திங்களில் அனுமதி வேண்டினோம். 21—10—51ல் அதன் செயற்குழுவினர் கூடி அந்தமைதானத்தில் நவம்பர் திங்களில், எஸ். ஐ. ஏ. ஏ. வின் வெள்ளி விழாவும், கிரிக்கெட் போட்டியும் நடைபெறுவதால் டிசம்பர் 13, 14, 15, 16, நாட்களில் நடத்துவதற்கு இடமளித்துள்ளார்கள்.

சென்னையில் இதற்கு முன்னால் நடத்தலாமென வேறு இடங்களுக்கு முயற்சித்தும், நமது வசதிக்கேற்ற மைதானம் ஏதும் கிடைக்கவில்லை. எல்லாவித வசதிகளும் நிரம்பியது எஸ். ஐ. ஏ. ஏ. மைதானம். மேலும் நவம்பர் முழுவதும் சிறு தூறல் வேறு வந்து தொல்லைதரக்கூடும். ஆகவே டிசம்பர் திங்களில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

தோழர் என். வி. நடராசன், மைதானவாடகையாக ரூ 800-ம், முன்பணமாக ரூ 250-ம் ஆக ரூ 1050 கட்டிவிட்டார்.

ஆகவே, மாநில மாநாட்டு அலுவலகம், அந்த மைதானத்திலே அமைக்கப்பட்டு. மாநாட்டு ஏற்பாடுகள் எல்லாம் மிகத்துரிதமாக நடைபெற்று வருகின்றன.

விளம்பரக் குழு.

புண்தீர, புனுகு போதாது!

★

மூன்று உருவங்கள் எரிகின்றன!— அந்தப் பெரியவர் கூட்டத்தைக் கண்டு பரக்கப் பரக்க வருகிறார், சிறு பிள்ளைகள் கோவில் உற்சவங்களின்போது குதூகலிக்குமே, அந்த முகத் தோற்றத்தோடு. சூழ்ந்து நிற்போரை போலீசார், தள்ளுகின்றனர். மக்களோ, எரியும் கொடும்பாவிகள் மீது, வைத்த கவனத்தை, விரைந்து செல்லும் பெரியவர் மீது வைக்கின்றனர். பெரியவர், தோளிலே, ஒரு சிறு பையன். எதிர்கால உலகம், அவன். 'தாத்தா, என்ன அது' —கேட்கவில்லை, அக்குழந்தை, ஆச்சரியத்தால் பார்க்கிறான். தாத்தா, தூக்கிக் காட்டுகிறார், 'பாரடா தம்பீ! அதுதான் இராவணன். அது, கும்பகர்ணன். இன்னொன்று மேகநாதன்!

குழந்தை கேட்கவில்லை, ஏன் அவர்களை எரிக்கிறார்கள் என்று. அதற்குத்தான் தெரியுமே, அம்மா இந்திரா, இது பற்றி சொன்ன கதை. ஆகவே, கைகொட்டிச் சிரிக்கிறது! மக்கள் ஆரவாரம்!! அந்தப் பெரியவரும் கரகோஷம் செய்கிறார்!!

* * *

கடந்த சில தினங்களுக்கு முன் டில்லி மாநகரில் ராம—லீலா கொண்டாடினராம் — வைதீகர்கள். இராவணனையும் அவனது சந்ததியையும் அழித்த ராமனின், திருநாளாம் அது. அந்த விழாவைக் காண, பேரப் புதல்வனுடன், இந்தியப் பிரதமர் பண்டித நேரு வந்தாராம்! ராசேந்திர பிரசாத்—இந்தியக் குடியரசுத் தலைவர் — சென்றாராம்!

மாநில மாநாட்டு நன்கொடை	
தனுஷ்கோடி தி. மு. க.	ரூ. 25
கூலூர் தி. மு. க.	ரூ. 25
இளஞ்செழியன் கொழும்பு	ரூ. 10
	60

டில்லி மந்திரிகள், அரசியல் தூதர்கள், அத்தனை பேரும் அங்கிருந்தனராம்! அந்தக் காட்சியைப் படம் எடுத்து நமது பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன.

இந்திய சர்க்காரின் செய்தி இலாகா, இந்தக் கோலாகலத்தைத் திரைப்படமாக்கி, சினிமாகொட்டகைகளில் இந்த வாரம் காட்டியும் வருகிறது.

இராவணன் — இராமன் யாரா ரென்பதை அறியாதவர் அல்ல நேரு. அவ்விருவருள்ளும் ஏற்பட்ட போராட்டத்தை, அவரே தனது திருச்செல்வி இந்திராவுக்கு எழில்பட விளக்கியுள்ளார். 'ஆரியருக்கும் திராவிட மக்களுக்குமிடையே நிகழ்ந்த போராட்டத்தை விளக்குவதுதான் இராமாயணம்' என்று, இந்திராவுக்கு விளக்கிய, அந்த சரித எழுத்தாளன், பேரனுடன் சென்று இராவணனையும், கும்பகர்ணனையும், இந்திரஜித்தையும் கொடும்பாவிகளாக்கி எரிக்கும் காட்சி — அல்ல! அல்ல!! விழா — காணச் சென்றிருக்கிறார். அவர்கள் எரிவதைக் காட்டி, பேரனின் குதூகலத்தோடு தானும் மகிழ்ந்து சிரிக்கிறார்!!

இராவணன் தென்னாட்டு மன்னன், திராவிடப் பெருங்குடிமகன். இது அறிந்தவர் நேரு. ஆனாலும் கலந்துகொண்டார், நேரு! தனது எதிர்காலப் பரம்பரையொன்றையும் அழைத்தேகி, மகிழ்ந்திருக்கிறார்!!

பண்டிதநேரு, கோயில் பூசாரியல்ல. கோலேந்தியவர். அந்தக் கோலேந்திக்கு, இந்தக் கொடும்பாவி விழா, மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது. தீக்கு இரையான அந்த உருவச்சிலைகள், ஓரிரு ரூபாய்களில் செய்யப்பட்டவையாகயிருக்கலாம்—தீ வைத்ததும், பிடித்துக்கொண்டு சாய்ப்பலாயிற்று ஒருசில நிமிடங்களில்.

ஆனால், அந்தக் காட்சியைப் படத்தில் கண்டதும் நமது உள்ளமெல்லாம் பதறியது. இரண்டு இலட்ச ரூபாய் செலவில், இந்திரா காந்தியின் மேற்பார்வையில், கட்டப்பட்ட காங்கிரஸ் மாநாட்டுப் பந்தல் எரிந்தபோது, அங்கே தலைமை தாங்கவிருந்த நேருவின் நெஞ்சம் என்ன பாடுபட்டதோ, அதைவிட ஆயிரமடங்கு, ஆவேசமும் ஆத்திரமும் அலைமோதின!

திரையிலே, காட்சி. பக்கத்திலேயிருந்த நண்பர் கருணாநிதி, கேட்டார்.

"நாம், ராமன் உருவைச் செய்து கொளுத்தினால் என்ன?"

நான், பதில் தரவில்லை. நண்பர் கேட்டதுபோல செய்தால்தான் யாரென்ன செய்யமுடியும்! இராவணன், தென்னாட்டுக் கோமான். செப்புகிறது, ஆராய்ச்சி ஏடு. நேருவின் எழுத்துக்களும் இதை வலியுறுத்துகின்றன. தென்னாட்டில் பரவிவரும், திராவிட உணர்ச்சி, தத்தமது முன்னோரைப் போற்றும் ஆர்வம் குறித்து, தினசரி டில்லிக்கு நம்மைப்பற்றிச் சொல்லச் செல்லும் ஓலைகள் ஏராளம். இருந்தும், அவர்கள் ராமலீலா, நடத்துகிறார்கள். நம் உள்ளத்தில் உத்வேகத்தைத் தூண்டும் இந்த ஊதாரி விழா நடைபெறுகிறது — அதற்கு உலகறிந்த தலைவர்கள் ஆதரவு தருகிறார்கள்.

"ராமலீலா—பாரம்பரியமாகக் கொண்டாடப்படும் விழா"

"அதை, யாருக்காகவோ, நிறுத்திவிடவா முடியும்?"

"நமது பிரானின் திருக்குணங்களைச் செப்புவது அல்லவா, அத்திருநாள்!"

இப்படிப் பலர், பதில்கூற முன்வரலாம். நம் கண்டனம் கண்டால்.

"இந்தக் காரியங்களெல்லாம் இந்துமதத்தின் பெருமைகளை விளக்குவன வல்லவோ?" என்று வாதிட முன்வருவோரும் உண்டு.

செங்கற்பட்டு மாவட்டத்தில்
மாநில மாநாட்டுக்காக

செங்கற்பட்டு	ரூ 200
மாங்காடு	ரூ 200

அளிக்கப்பட்டது

ஆரியப் பரம்பரை புகுந்தபோது தம்மை எதிர்த்த மன்னாதி மன்னர்களை அரக்கர்களென்று தத்தமது வேதங்களில் குறித்ததாக, ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

அரக்கர், ராக்ஷசர், நீசர், இன்ன பிற இழிசொற்களால் திராவிட பூர்வக் குடிகளை ஆரிய மதோபதேசிகள் அழைத்ததாக, சரித்திரம் கூறுகிறது,

அந்தச் சரித்திரத்துக்கு விளக்கம் தர வந்த பண்டித நேருவும், இந்த உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார். இருந்தும், அரக்கன் ஒழிந்த நாள் கொண்டாடப்படுகிறது! ராவணேசுவரவதம் நடத்திக் காட்டுகிறார்கள்!!

கேட்டால், இந்துமதப்படி, இவைகள் கொண்டாடப்பட வேண்டுமென்பர், வைதீகர்கள்.

வேதாகமங்களை சான்றுக்கழைத்து, விக்டோரியா சாசனத்தை வாதத்துக்கெடுத்து, நம்மை விதண்டாவாதிகளென்றும், சட்டத் துரோகிகளென்றும் கண்டிக்க முனைவர்.

'இந்துமதம்! இந்துமதம்!! எனப் பறைசாற்றும் வைதீகர்களின் பார்வைக்கு, கீழ்வரும் தகவல்களைக் கொண்டு வர விரும்புகிறோம்.

"எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் இருக்கவேண்டும், வீண் தொல்லைகள் மனிதர்களிடமிருந்து விலக்கப்பட வேண்டுமென்கிற ஜனநாயக கொள்கையை பார்ப்பனர்கள்,மதம், என்கிற பெயரால் எதிர்க்கிறார்கள்."

கூறுவது, நாமல்ல. இந்தியாவில் அமெரிக்க அரசாங்கப் பிரதிநிதியாக இருந்த புல்லிட் என்கிற எழுத்தாளர், அமெரிக்க இதழ் ஒன்றில் இவ்விதம் குறிப்பிட்டுள்ளார்— இந்துமதம், என்கிற தலைப்பில் அவர் கட்டுரையில், இந்துமதம், வைதீகர்களுக்கு எத்தகைய போர்வையாக இருக்கிறது என்பது விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

மக்களை அடக்கி, அவர்களை சுதந்திரத்தோடு வாழவிடாமல் தடுக்க வைதீகம் வைத்திருக்கும் வாள், இந்துமதம் என்று அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

'லைப்' இதழில் வந்துள்ள அக்கட்டுரையில், மேலும் அவர் கூறுகிறார் இந்துமத புராணங்களின் ஆபாசங்கள் குறித்து.

இந்துக்கள் எல்லோரும் வணங்கும் கடவுள் எது என்று பார்த்தேன், அவர்கள் லிங்கம் என்ற ஒன்றை வணங்குகிறார்கள். அது என்ன தெரியுமா? லிங்கம் என்பது, ஆண்குறியாகும்.

கூறுவது, புல்லிட்; அமெரிக்கர்; அதிலும் அரசியல் அறிவுள்ளவர். இவ்வளவு அழகாக, கிண்டலோடு எழுதியிருக்கிறார், இங்குள்ள கேவல நிலைமை குறித்து.

இந்த எழுத்துக்களைக் கண்டதும் சனாதனிகள் தண்டு தூக்குவர். அடுக்குமோ இது, என்ன அநியாயம் என்றெல்லாம் ஆர்ப்பரிப்பர்.

ஏனெனில், இந்திய பூமிக்கு வந்து இங்கு தாண்டவமாடும் இழிநிலைகளை எடுத்துச் சொன்ன அந்நிய அறிஞர்கள் யாருமே, இந்த வல்லூறுகளின் எழுத்துக்குத் தப்பியதில்லை.

மிஸ் மேயோ கண்டிக்கப்பட்டார், இந்திய சனாதனிகளால். பீவர்லி நிகோலஸ், என்ற பிரிட்டிஷ் எழுத்தாளன் இந்தியா பற்றி வரைந்த எழுத்துச்சித்திரம், கண்டு இந்திய தேசிய இதழ்களெல்லாம் சீறின. இப்போது, புல்லிட்—இந்து மதம் பற்றி எழுதுகிறாரென்றால் சும்மாவா இருப்பர்! அதிலும், இப்போது சுதந்திரம் கிடைத்திருக்கிறதே!!

புல்லிட் எழுதிய கட்டுரை கண்டதும், சனாதனத்தின் காவலாளனாக, இந்திய பட்டினி மந்திரி முன்ஷி கிளம்பியிருக்கிறார்.

"அமெரிக்கனே! என்ன ஆணவம் உனக்கு" என்று, துப்பாக்கி தாங்கி அல்ல, பேனாவை எடுத்து பெரும் போருக்குப் புறப்பட்டிருக்கிறார்.

கட்டுரைகள்! கண்டனங்கள்!; அவரிடமிருந்து புறப்பட்டிருக்கின்றன. அவைகளை எடுத்து, இந்திய தேசிய இதழ்கள் யாவும் பிரசுரித்திருக்கின்றன — வடநாட்டு இதழ்களில் அமெரிக்கன் கட்டுரை குறித்து கண்டனக் குறிப்புகளும் தீட்டப்பட்டிருக்கின்றன.

புல்லிட், வீசிய உண்மை புல்லையும் பருத்தியையும் தின்னும்படி உபதேசம் புரியும் முன்ஷியாருக்கு கோபாவேசத்தை உண்டாக்கியிருக்கிறது!

மக்கள் தன் மீது வாரி வீசும் ஆத்திரத்தைக் காண்பிக்கும் இடம் அகப்பட்டது என்ற எண்ணமோ, என்னமோ, புல்லிட்—கட்டுரை குறித்து, பெரிய கண்டனக் கட்டுரையே தீட்டிவிட்டார்.

புல்லிட் தனது கட்டுரையில் குறிப்பிடும் இரண்டு அம்சங்கள்.

பார்ப்பனர், மதம், என்ற போர்வையில் அடாபிடி செய்கிறார்கள்.

இந்துமதக்கடவுள், அநாகரீகக் கற்பனையோடு உள்ளன என்பதாகும். இந்த இரண்டு கூற்றுக்களையும் முன்ஷி மறுக்கவில்லை. எப்படி மறுக்க முடியும்? லிங்கம் என்பது ஆண்குறி என்பதைத்தான் அழகாகவிளக்கும் லிங்கபுராணம், இருக்கிறதே!

அதனால், அமெரிக்க எழுத்தாளரின் கூற்றை மறுக்கமுடியாத: இந்த மாமந்திரி, வீராவேசத்தோடு பாய்ந்திருக்கிறார். "இப்படியெல்லாம் பேசலாமா! அடுக்குமா? அய்யய்யோ!" என்று அலறித் தவிக்கிறார்.

தினசரி அலறித் தவிக்கும் கோடிக்கணக்கான மக்களின் கூக்குரல் காதில் விழுந்தும், கவலைப்படாத அவருக்கு, புல்லிட் எழுதிய சில வார்த்தைகள், புயலையும் எரிமலையையும் உண்டாக்கியிருக்கிறது, அவர் மனதில்.

முன்ஷி பரம்பரை—வடநாட்டில் வைதீகந்தாங்கிகள் என்றே கூறப்படுவர். அவர் ஒரு வைதீகந்தாங்கி பழுத்த பார்ப்பனர். எனவேதான், புல்லிட் எழுதிய வார்த்தைகள் கண்டதும், புல்லேந்தாது பேனா ஏந்தி கிளம்பியிருக்கிறார்.

முன்ஷியின் பதைபதைப்பு கண்டதும், நமக்குப் பரிகாசமாகவே உருவாகிறது. வாதத்துக்கு கிளம்பி வக்கில்லாததால் வாலறுந்த நரி போல் ஊளையிடும் அவர் போக்கு, ஊமையையும் 'கலகல'வெனச் சிரிக்க வைக்கும்!

மேயோ, நிகோலஸ் ஆகியோரைத் தீட்டித் தீர்த்த பரம்பரையின் இப்போதைய வாரிசுதான் இந்த முன்ஷி.

இங்குள்ள இழிநிலைகளை எடுத்

(5-ம் பக்கம் பார்க்க)

ஆளுக்கு நாலு பேர்

[சி. பி. சிற்றரசு]

சிந்தனையை வேறு பக்கம் திருப்ப வேண்டாம். ஆளுக்கு நாலு பேர் என்றவுடனே, ஆளின் கடைசிக் காலத்தில் இறந்துவிட்ட மனிதன், இந்த உலகத்தில், தாயால், தந்தையால், சுற்றத்தாரால், நண்பர்களால், சமூகத்தால், அரசாங்கத்தால், மற்ற யாரால், நிராகரிக்கப்பட்டாலும், அவன் இறந்துவிட்ட பிறகு நிச்சயம் நாலுபேர் வருவார்கள் என்று தெரியும். ஏனென்றால் அவன் பிரேதம் சுடுகாட்டுக்குப் போய்ச் சேர வேண்டுமே அதற்காக!

இறுதிக் காலத்தில் அந்த நான்கு பேர் நிராகரித்தால் நிலைமை என்னவாகும்? அழுகி, கிருமிகள் சேர்ந்து பக்கத்தில் யாரும் அணுக முடியாத நிலை ஏற்பட்டுவிடும். மேலும், அதைப் போன்ற பிணம் ஒன்று தெருவில் கேட்பாரற்றுக் கிடந்தால், இவன் இறந்ததற்குக் காரணம் என்ன என்று அறிய மக்கள் கூடுவார்கள்.

மக்கள் எண்ணம் வேறாக முடியும். ஆகவே அதைப்போன்ற பிணங்களை உடனே அகற்றிவிட வேண்டுமென்று நகராண்மைக் கழகங்கள் எடுத்துக் கொள்ளுகிற முயற்சியில் நான்கு பேர்கள் வந்து நிற்பார்கள். இறந்தவன் மேலுள்ள ஆசையால் அல்ல, அதிகாரவர்க்கம் தங்களுக்களித்த கட்டளையால்.

அவன் உயிரோடிருக்கும்போது எல்லோராலும் நிராகரிக்கப்பட்டவன் தான்; எனினும் அவன் இறந்த பிறகு சுடலைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டதால்; நான்கு பேர் கூடிவிட்டார்கள்.

அதைப்போல ஒரு அருமையான செய்தி கிடைத்திருக்கிறது. சிம்லாவுக்கு அருகில் உள்ள மகாசு என்ற பகுதியில் 13 ஸ்தானங்களுக்கு 55 பேர் போட்டியிடுகின்றனர். அவர்களில் 11 பேர் காங்கிரஸ் சார்பில்; சுயேச்சைக் கட்சியின் சார்பாக 24 பேர்; ஷெடியூல் வகுப்பு பெடரேஷன் 9 பேர்; பிரஜா கட்சி 7; சோஷியலிஸ்டு கட்சி 2; ஜன சங்கம் 2. ஸ்தானங்கள் 13. நிற்பவர்கள் 55 பேர், அதில் காங்கிரஸ் சார்பாக 11 பேர், அவர்களை எதிர்க்க 44 பேர், ஆக ஆளுக்கு நாலு பேர்.

திமிர் பிடித்த வெள்ளைய, ஏகாதிபத்தியம் என்ற சிங்கத்தின் குரல் வளையை நெரித்தவர்கள். சூரியனே அஸ்தமிக்க முடியாத பிரிட்டிஷ் அரியாசனத்தை ஆட்டிப் பார்த்தவர்கள்.

ஜெக்மஞ்சப் பேரிட்ட வீர நெப்போலியனை செயிண்ட் ஹெலினாவில் சிறையிட்ட நெல்சன் பரம்பரையை திணற அடித்தவர்கள். துப்பாக்கிக் குண்டுகளை மார்பில் ஏந்திய வீர நெஞ்சினர். வெஞ்சிறையைத் தம் வீடாக மதித்தவர்கள். தியாகம் என்றால் காங்கிரஸ், காங்கிரஸ் என்றால் தியாகம் எனுமளவுக்கு ஒன்றையொன்று பிரிக்க முடியாமல், பின்னிக் கொண்டிருப்பதாக பெருமைப் பேசிக்கொண்டிருந்த காங்கிரஸ், தன்னை எதிர்ப்பவர் யாருமில்லை, தான் எதிர்க்கவும் ஆள் இல்லை. கேட்டாலும் பதில் சொல்லித்தான் தீரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஏனென்றால், நாடு சுதந்திர நாடு, இஷ்டமிருந்தால் பதில் சொல்லலாம், இஷ்டமில்லையானால் பதில் சொல்லாமலே கூட இருந்துவிடலாம், பதில் சொல்லுவதும் சொல்லாததும் அவரவர்கள் இஷ்டந்தான், என்று அரசியல் குதர்க்கவாதம் பேசும் காங்கிரஸ் தான் நிறுத்திய 11 பேரை எதிர்க்க 44 பேர் தயாராய் விட்டார்கள். என்ன ஆச்சரியம், இந்த நிலைமை ஒரு நூற்றாண்டுக்குப் பிறகா? இல்லை, இல்லை. நான்கே ஆண்டுகளில்.

“இந்தியாவிலேயே இரண்டே இரண்டு கட்சிகள்தாம். ஒன்று காங்கிரஸ், மற்றொன்று வெள்ளை சர்க்கார், இவைகள் தவிர வேறு எந்தகட்சியும் இல்லை” என்று பெருமைப்பட பேசப்பட்டது அன்று. ஆனால் இந்த நான்கு ஆண்டுகளிலே தோன்றியிருக்கின்ற கட்சிகள் எண்ணத் தொலையாதவை.

காங்கிரஸ் தவிர மற்றக் கட்சிகள் எல்லாம் அலைகடலுக்கப்பாலான அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையா? இல்லையானால் ஈரேழுபதினாலு லோகத்திலிருந்து இந்த லோகத்துக்கு வந்தவையா?

இல்லையே. நேற்றுவரை தோளோடு தோள்வாங்கி நின்றவர்கள். சிறையில் சிப்பியை ஏந்தியவர்கள். தடியடியும் துப்பாக்கி வேட்டையும் தாங்கி நின்றவர்கள். இன்னும் பலப்பலர் இன்று பல வேறு பகுதிகளாக நின்று எதிர்க்க ஆரம்பித்திருக்கின்றனர்.

ஒருகாலத்தில் — மற்ற நாடுகள் தங்களையன்றி வேறு யாரையும் தெரிந்துகொள்ளாத அளவுக்கு செய்தித் திரையிட்டிருந்தவர்களே, இன்று தங்களை எதிர்க்க பல கட்சிகள் தோன்றிவிட்ட கொடுமையை உலகறிய வேண்டிவந்ததே என்று சொல்லாமல் சொல்லி, அழமுடியாமல் அழுது தீர்ப்பதைப்போலிருக்கிறது சிம்லாவிலிருந்து வந்த செய்தி.

எனினும், தைரியத்தை அணைத்துக்கொண்டு, பழைய கித்தாப்புகளைச் சொல்லிக்கொண்டு ஓட்டு வாங்கிக்கொள்ளலாம் என்றநிலைமை மாறிவிட்டது.

இன்று இருக்கும் கேள்வி, இந்த நான்கு ஆண்டுகளில் என்ன செய்தாய், என்பதுதான்.

‘இன்னும் ஒருமுறை அனுப்பிப் பாருங்கள்’’ என்றபதில் கிடைக்குமானால், “நன்மைகளைச் செய்வதற்கான அறிகுறிகளே ஒன்றும் இல்லையே’’ என்று கேட்க மக்கள் மன்றம் தயாராய்விட்டது. அதற்கு இனி பரிகாரம் தேடவேண்டும், அதற்கும் நேரமில்லை. தேர்தல் நெருங்கிவிட்டது. ஆங்காங்கு ஆட்களை நிறுத்தவேண்டும். கூடுமான வரையிலும் பழைய ஆட்களை நீக்க வேண்டும். ஏனெனில் மக்களிடம் செல்வாக்கை இழந்தவர்கள்.

ஆகவே, புது ஆட்கள் அதுவும் பணம் செலவழிக்கக் கூடியவர்கள், கூடுமானவரை பத்துபேர் மதிக்கத்தகுந்தவர்கள், அதுவும் இல்லையானால், தன்னை எதிர்ப்பவர்களே பயப்படக்கூடிய அளவில் எந்த வகையிலோ செல்வாக்கடைந்தவர்கள், இதைப் போன்றவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இதற்கிடையிலே தாங்களே சொ[illegible]

([illegible])

✶ தேர்தல் வாதம் ✶

—✲✲—

வகுப்புவாதம், நாட்டிற்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய அபாயம்.

இந்த அபாயத்தைக் கண்டு பிடித்து, நாட்டு மக்களுக்குச் சொல்லியிருக்கிறார் நேரு.

தேர்தல் நெருங்குகிற நேரத்தில் இதை காங்கிரஸ் பீரங்கிகளுக்கு வெடிமருந்தாக வேண்டும் என்ற நோக்கத்திலே, காங்கிரஸ் தேர்தலில் நிற்பதே வகுப்புவாதத்தை ஒழிக்கத்தான், என்று பேசியுள்ளார்.

நேரு, இப்பொழுது எங்கு பேசினாலும், இந்த அபாயத்தை அறிவிக்காமல் தன்பேச்சை முடிப்பதில்லை.

வகுப்புவாதம்! இதனை அவர், புதிய தீனியாகத் தந்துள்ளார், தேர்தல் தப்பட்டை தாங்கிகளுக்கு!

வகுப்புவாதம் வளர்கிறது, அது நாட்டிற்கு ஏற்படப்போகும் மிகப் பெரிய பயங்கரமான அபாயம் என்பதோடு அவர் நிறுத்தவில்லை. அது, நாட்டின் சமூக, பொருளாதார உயர்விற்கேமுட்டுக்கட்டையென்று வேறு பேசியுள்ளார்.

நேரு, இன்று நெருப்புப் பொறி பறக்க பேசும்பொழுதெல்லாம், வகுப்புவாத பயங்கரத்தை குறிப்பிடுகிறார்.

நேரு, தேர்தல் நேரத்தில், இதனைக் குறிப்பிடுகிறார். நேற்றுவரை, இதுபற்றி அதிகம் பேசாத அவர், இன்று, அதனையே மேருவாக்கியிருக்கிறார்!

வகுப்புவாதம் என்பதை அவ்வளவு விரிவுபடுத்தி, மக்கள் மனதிலே பதிய வைக்கிற அளவு அது வளர்ந்திருக்கிறதா இன்று, என்றால், இல்லை. ஆனாலும், வகுப்புவாதத்தை ஒழிப்பதே காங்கிரஸ் இலட்சியம் எனப்பேசுகிறார்!

வகுப்புக் கலவரம் ஏதாவது நடந்ததா என்றால், இல்லை. இருந்தும் வகுப்புவாதத்தை இழுத்துப் பேசுகிறார்!

நவகாளி நடந்து நாட்கள் பலவாகிவிட்டன! பீஹார் ஏற்பட்டு [illegible] விட்டனர்! இருந்தும்வகுப்புவாதத்தின் அடிப்படையே பாகிஸ்தான் என்று பேசிய நாட்கள்போய்,பாகிஸ்தானுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளும் நாட்கள் வந்துவிட்டன. இப்பொழுது வகுப்புவாதம் என்கிறார்!

நேரு, நீளப்பேச்சுக்காரர் மட்டுமல்ல, ஆவேசப் பேச்சுக்காரர், ஆவேசப் பேச்சுக்காரர்மட்டுமல்ல, அவசரப் பேச்சுக்காரர் என்றெல்லாம் அவரை சுதந்திர போராட்டத்தின்பொழுது குறிப்பிடுவர், அவரது நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்த அரசியல் அறிவாளிகள்.

ஆனால், அவர் இப்பொழுது பேசிடுவது அப்படிப்பட்ட முறையிலல்ல! அவர் பேசுகிறார் அர்த்தத்தோடு! அந்த அர்த்தமோ ஆழ்கடலைவிட ஆழ்மானது!

தேர்தல் வருகிறது. மக்களிடம் சென்றாகவேண்டும். அவர்கள் மனதில் படுகிற மாதிரியான செய்திகளைச் சொல்லியாகவேண்டும். இல்லாவிடில், வாக்குரிமைகளை வழங்க மாட்டார்கள்!

முன்னர் கிடைத்த சுதந்திரம் என்ற தாரகமந்திரம் இனி செல்லாது! ஆகவே, புதிய ஒன்று தேவைப்படுகிறது! அதற்குவகுப்புவாதத்தை ஒழிப்போம் என்று கூறச் சொல்கிறார் நேரு!

வகுப்புவாதத்தை ஒழிப்பது என்றால், மக்கள் வாக்குரிமைகளைத் தருவார்களோ என்று கேட்கமனம் வரும். ஆனால் வகுப்புவாதம் என்ற வார்த்தையிலே, புகுந்துள்ளபொருளைப்புரிந்துகொண்டுவிட்டால்,நேருவின் இந்தப் புதிய காடியைத் தெரிந்துகொள்ளமுடியும்.

வகுப்புவாதம் — இரத்த நாற்றமடிக்கும் சொல், வடஇந்தியாவில்!

அந்தச் சொல்லில், சொட்டுங் குருதி இன்றும் நின்றபாடில்லை.

வட இந்தியாவில் இந்து—முஸ்லீம் வேற்றுமைதான் வகுப்புவாதம் என்ற வார்த்தையால் குறிப்பிடுவர்.

இந்த வேற்றுமை, எந்துணை விபரீதங்களை, அண்மையிலே செய்து காட்டிவிட்டது என்பதை நாம் அறிவோம்.

வகுப்புவாதம், ஒருபெரிய காட்டுமிராண்டி யுத்தமே நடத்தி விட்டது.

இந்துக்களும், முஸ்லீம்களும் காட்டுவிலங்குகளைப்போலவே சண்டையிட்டனர்.

ஒருவரையொருவர் தாக்கினர். சுட்டனர். வீடுகளைத் தீக்கிரையாக்கினர். அந்த தீயிலே. சிசுக்களை எரித்தனர். பெண்களைப் பங்கப்படுத்தினர். ஊரையே அழித்தனர்

யார், யார் எங்கெங்கு அதிகமாக இருக்கிறார்களோ, அவர்கள், மிருகங்களாகி, மனித வேட்டையாடி, மாமிச மலைகளைக் குவித்தபடியே இருந்தனர்.

வகுப்புக் கலவரம் என்ற வார்த்தைகளை, பத்திரிகைகளில் பார்க்காத நாளில்லை.

எங்கும் பிணங்கள்! எங்கும் அழுகுரல்! எங்கும் சோகம்! வகுப்புவாதம் வடஇந்தியாவிற்கு தந்த விருந்து இது!

வகுப்புவாதம், அகதிகள் என்றொரு கூட்டத்தையே உண்டாக்கிக் காட்டிற்றென்றால், அதன் முழு வேகத்தின் தன்மை புரியும்.

(11 பக்கம் பார்க்க)

(முன்பக்கத் தொடர்ச்சி)

மக்கள்முன் நிற்க முடியவில்லை. அதற்காக தரகர்கள் நாலுபேரைச் சேர்க்கவேண்டும்.

பொல்லாதவர்கள் என்று பொல்லாங்கு சுமத்தவேண்டும்,போலீசைப் பயமுறுத்தவேண்டும். போலிங் பூத்துகளுக்குத் தகுந்தவர்களைத் தயாரிக்கவேண்டும், கல்லூரி மாணவர்களைக் கட்டியாளவேண்டும், வேதமோதியோ, வேள்விசெய்தோ, சட்டத்தைக் காட்டியோ சர்க்கார் செல்வாக்கை நீட்டி ஓட்டுகளைச் சேகரிக்கவேண்டும் என்றகவலையில் நிற்கிற பதினொருபேரை 44 பேர் எதிர்ப்பதற்காக நின்றிருக்கிறார்கள்.

ஆக ஆளுக்கு நாலுபேர் என்ற அந்திய நிலை வராதிருக்குமா என்பதுதான் இன்று அரசியல் வானில் வட்டமிடும் சந்தேக மேகங்கள்.

✲

10-ம் பக்கத் தொடர்ச்சி

பாகிஸ்தான் பிரிவதற்குள், வட இந்தியா, இரத்தக்காடாகத்தானிருந்தது! இந்தத் தோற்றத்தைத்தான் வகுப்புவாதம் என்ற சொல் வடஇந்திய பாமரர் கண்களின் முன் கொண்டுவந்து நிறுத்தும்.

இந்த வகுப்புவாதத்தை ஒழிக்கவே காங்கிரஸ் பாடுபடுகிறது என்றவுடன், அவர்கள் முகம் மலரும், வாக்குரிமைகளை வழங்குவர் என்று கருதித்தான் நேரு, இந்த புது வெடியைத் தருகிறார்!

ஆனால், அவர் இதனை எப்படி வெளிப்படையாகச் சொல்லமுடியும்? அதற்காகச் சுற்றி வளைக்கிறார்! சமூக, பொருளாதார முன்னேற்றத்தைத் தடைப்படுத்துமாம். வகுப்புவாதத்தை திரையாகக் கொண்டு பணம்படைத்தோர் முன்னேறுவார்களாம். ஏதோ சொல்கிறார்!

* * *

ஆனால், வகுப்புவாதம் என்று நேரு கூறியவுடன், அதே சொல்லை வைத்து, இங்கு தூற்றத் தொடங்குகிறார்கள், பிரச்சார பீரங்கி வாயர்கள்.

வகுப்புவாதம் என்ற சொல் ஒரு பச்சோந்தி! இருக்கும் இடத்திற்கேற்ற நிறம் வந்து சேருவதுபோல பொருள் வேறுபடும், இடத்திற்கு இடம்!

ஒவ்வொரு நாட்டில், ஒவ்வொரு வகையான வகுப்பு வேற்றுமைகள் இருந்தன, மறைந்திருக்கின்றன. இன்னமும் இருக்கின்றன.

அதுபோலத்தான், வடஇந்தியாவில், இரத்தம் தோய்ந்த எழுத்துக்களால்தான் வகுப்புவாதத்தை, எழுதிக் காட்டமுடியும்! ஆனால் திராவிடத்தில் அப்படிக் கூறமுடியாது!

நவகாளியும், பீஹாரும் வட இந்தியாவில் நடந்தனவே தவிர, திராவிடத்தில் அத்தகைய வெறியாட்டங்கள் நடைபெறவில்லை!

இந்து—முஸ்லீம் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். இப்பொழுதும் வாழ்கிறார்கள். இனியும் வாழ்வார்கள்.

ஆனாலும், அதே வகுப்பு வாதம் என்ற சொல்லால், நம்மைத் தூற்ற, நாகல் நடையழகர்கள் சிலர் துணிந்து முன்னணி வகுத்து, பிறகு கலைந்து ஓடிவிட்டனர்.

இங்கு பிரச்சினை பிராமண பிராமணரல்லாதார் என்ற பெயரில் இருந்தாலும், வடஇந்தியாவைப் போல, ரத்தவெறி இங்கில்லை. பலாத்கார உணர்ச்சி கிடையாது!

காரணம், இந்தப் பிரச்சினைக்கும், அதற்கும் வேற்றுமை அதிகம்!

பிராமணர்—பிராமணரல்லாதார் என்று பேசிடுவது வகுப்புவாதம் என்று நேரு நடையில் பேசிடுவோர் நினைத்துப் பார்க்கவேண்டும், ஏன் இங்கு, நவகாளி, பீஹார் நடக்கவில்லை யென்று! முடியாததாலல்ல, தேவையில்லையாதலால்!

நாம், எவரையும் பிரித்து, வகுப்புவாதத்தை வளர்க்க விரும்பவில்லை.

மலர் விஷவாடை அடிக்கிறதென்றால், செடியையே அழித்துவிட வேண்டும் என்பதே நம் எண்ணம்.

வாதம் ஒரு நோய். அதனை விரட்டும் மருந்து நமக்குத்தெரியும்.

வகுப்புவாதம், பிடிவாதத்தால் தீர்ந்துவிடாது! பிடிவாதமான பிரச்சாரத்தால் நீங்கிவிடாது! அப்படி நீங்கிவிடுமானால், வட இந்தியா, கொலைகளமாகியிருக்காது!

வகுப்புவாதத்தைப் போக்குவதாகக் கூறி, முடக்குவாதத்தை வரவழைத்துக் கொண்டார்கள்.

முடக்கு வாதத்திலிருந்து கொண்டு, இப்பொழுது புதிய வாதத்திற்கு அச்சாரம் வாங்குகிறார்கள்!

அந்த வகுப்பு வாதத்தை வைத்துக் கொண்டு, திராவிடத்திலும் சதிராடுகின்றனர்!

வகுப்புவாதம் கூடாது. உண்மை, ஆனால் அப்படி பேசுவதோடு நின்றுவிட்டால் காரியம் நடந்துவிடுமா?

வகுப்புவாதம் ஏன் கிளம்புகிறது? எதன் அடிப்படையில் எழும்புகிறது? அந்த அடிப்படையையே இடித்துவிட்டால், வகுப்புவாதம் கிளம்பாதல்லவா? ஆகவேதான், நாம் அந்த முயற்சியிலே ஈடுபட்டுள்ளோம்.

(5-ம் பக்கம் பார்க்க)

11-ம் பக்கத் தொடர்ச்சி

இந்தப் பிரச்சினையைப்பற்றி கவனிக்க ஒரு தனி இலாகா ஏற்படுத்தப்பட்டது. அதற்கு ஒரு மந்திரியும் பணியாற்றிட வேண்டியதாயிற்று.

இந்தப் பிரச்சினையை ஒட்டி, காதுலே எல்லைக் கமிஷன் துரிதமாக வேலை செய்ய அனுப்பப்பட்டது.

அந்தக் கமிஷன் தன் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முன்னேயே, கரன் பிரச்சினை மந்திரி மோகன் பா சிங் கரன்நாடு அமைக்க வேண்டுமென் சட்டமே கொண்டு வந்தார்.

தனி நாடு அமைக்கப்படவேண்டும் என்று நூற்று முப்பது பேர் வாக்களித்தனர். மூவரே எதிர்த்தனர். ஆகவே, கரன் நாடு அமைப்பதென்பது, உறுதியாகிவிட்டது!

கரன்கள் கோரிக்கை நிறைவேறிவிட்டது!

பர்மியப் பிரதமர், தாக்கின் நு இன்றைய நிலையில் சால்வின் மாவட்டம்மட்டுமே, கரன் நாடாக அமையும், ஐராவதி, தென்னசிரம் முதலிய மாவட்டங்களையும் இணைத்திடத்துடிக்கின்றனர் கரன்கள், ஆனால் அப்படிச் செய்வது, அங்கு வாழும் மக்களின் விருப்பத்தைப் பொறுத்தது என்று தெரிவித்துள்ளார்.

எல்லையைப்பற்றிய தொல்லையைப் பிறகு தீர்ப்போம், இடபொருள் கேட்ட நாடு இதோ, என்று [illegible] அரசு அளிக்கப்பட்டது.

கரன் நாடு அமைத்து விட்டதாலேயே, பர்மிய யூனியன் பூகம்பத்தால் இடிந்து நொறுங்கி விடவில்லை! பர்மிய யூனியனில் அதுவும் சுயேச்சையுள்ள ஒரு நாடாகத்தானிருக்கப் போகிறது! தனிநாடாக இருப்பதாலே, அதற்கு தன் இனத்தினரின் நல்வாழ்விற்கான திட்டங்களை சுயமாக நிர்ணயிக்கும் உரிமை கிடைத்திருக்கிறது! அந்த உரிமை கொண்டு, அது பெருமையடைய முடியும் என்றுதான் கரன் நாடு கேட்டார்கள்! கிடைத்துவிட்டது!

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.